சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 10.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 62/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | கண்ணதாசன் |
| தந்தை பெயர் | : | ராஜன் |
| கிராமம் | : | விடையல்கருப்பூர் |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 45 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

முதல் விசாரணை

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா-1 அபிக்கண்ணன் என்பவரை எனக்கு

தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். வழக்கு விவரம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் போலீசார் கையொப்பம் கேட்டார்கள் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். நான் கையொப்பம் செய்துள்ள மகஜரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இவரது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி அளித்ததாக சொல்லக்கூடிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். நான் கையொப்பம் செய்துள்ள பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. 1ம் எதிரி அளித்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இவரது கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ-7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை போலீசார் விசாரித்தபோது மேற்படி விவரங்களை மட்டும் தான் கூறியுள்ளேன்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 04.01.2025 ஆம் தேதி 6.30 மணியளவில் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அ.சா-1 எதிரிகள் மீது கொடுத்த புகாரின் பேரில் சம்பவ இடத்தை பார்வையிட்டு எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கு எதிரி கருப்பூர் சட்ரஸ் அருகே கட்டைகளை முட்புதர் அருகே மறைத்து வைத்து வந்ததாகவும், அந்த கட்டைகளை போலீசார் கைப்பற்றிய போது நானும், அ.சா-6 சங்கர் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார்

விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்றும் நோக்கோடு உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.11.10 17:12:51 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.